# Indigenous Communities & Fisherfolk

**Dr. N. Nisha Navis**
*Assistant Professor, Tamil Research Center*
*S.T. Hindu College, Nagercoil*

மலர்: 10

சிறப்பிதழ்: 1

மாதம்: அக்டோபர்

வருடம்: 2025

**P-ISSN: 2454-3993**

**E-ISSN: 2582-2810**

**DOI:**
https://doi.org/10.5281/zenodo.17346696

**Abstract**

*The traditional occupation of the Parathana (indigenous) people has been hunting and fishing. In Kanyakumari district, the coastal communities have long been associated with the fishing profession. Due to the proximity of land to the sea in various regions, the people of these areas have, from ancient times, engaged in fishing as a hereditary occupation. These communities are known by the names Parathavar, Paravar, or Paravars. During the Sangam period, they lived with distinction as wealthy landowners, traders, and shipowners. Fishing and pearl diving were their primary occupations. They belong to the Nagar (urban/trading) class. Literary sources contain numerous references to the Parathavar community. The term "Parathavar" has several explanations and interpretations. Inscriptions related to the Parathavar are found extensively in Kanyakumari district. The references about the Parathavar in this study have been compiled from such literary and epigraphical sources.*

***Keywords:*** *Parathavar, Fisherfolk, Coastal Land, Sangam Literature, Inscriptions*

**References**

1. Subbiah Mani Ayyar, The Story of Conversion of the Parathavar Community, Dinamani, 29.09.1959.
2. SelaiSaha Devi Mudaliar, Tamil Society and Associations, Tirunelveli, 1991.
3. Parameshwaram, Dr., Ethnic Reconstruction of Parathavar Community, Kavya Publishers, 16th Cross Street, Kodambakkam, Chennai 24, 2005.
4. MayilaiSeeniVenkatasami, Sangam Tamil People and Society, Vetri Masi Publications, Chennai 600088.
5. Meenavan, Poet, Ancient Tamils and Parathavar Life, Sivasakthi Publications, 20/43 Neeladheervi Street, Nagapattinam 611001, December 2004.
6. Vanamamalai N., Tamil Society and Culture, New Century Book House, Chennai, 1966.
7. A. [Name in original], 1936.
8. A. [Name in original], 1920.
9. Gunathithan, A.U.K., 1982.

# பூர்வீகக் குடிகள் – பரதவர்கள்

***முனைவர் நே. நிஷா நேவிஸ்***
உதவிப் பேராசிரியர், தமிழ் ஆய்வு மையம்
தெ.தி. இந்துக்கல்லூரி, நாகர்கோவில்

***ஆய்வுச் சுருக்கம்***
*புராதன மக்களின் பூர்வீகத் தொழில் வேட்டையாடுதலும் மீன்பிடித்தலும் ஆகும். குமரி மாவட்ட கடற்கரை மக்களின் வாழ்க்கையோடு மீன்பிடித்தொழில் இரண்டறக் கலந்ததாகும். ஐவகை நிலங்களில் நெய்தல் நிலம் கடலும் கடல் சார்ந்த இடமாக இருப்பதால் இம்மண்ணில் வாழும் மக்கள் தொன்று தொட்டு பாரம்பரியமாக மீன்பிடித் தொழில் செய்து வருகின்றனர். இம் மக்கள் பரதர், பரதவர், பரவர் என்ற பெயர்களால் அழைக்கப்படுகின்றனர். சங்க காலத்தில் பெருஞ் செல்வந்தர்களாகவும் வணிகர்களாகவும் பட்டங்கட்டிகளாகவும் சீரும் சிறப்புடன் வாழ்ந்தனர். மீன்பிடித்தல், முத்துக் குளித்தல் போன்றவை இவர்களின் முக்கியமான தொழிலாகும். இவர்கள் நாகர் வகுப்பினர் எனப்படுகின்றனர். இலக்கியங்களில் பரதவர்கள் பற்றிய செய்திகள் பல இடங்களில் காணப்படுகின்றன. பரதவர் என்ற சொல்லுக்கு விளக்கங்கள் அதிகமாகக் காணக்கிடக்கின்றன. பரதவர் குறித்த கல்வெட்டுக்கள் பல குமரி மாவட்டத்தில் கிடைக்கின்றன. பரதவர் குறித்த செய்திகள் இவ்வியலில் எடுத்துரைக்கப்பட்டுள்ளது.*
***திறவுச் சொற்கள்:*** *பரதவர், மீனவர், நெய்தல், சங்க இலக்கியம், கல்வெட்டுகள்.*

### முன்னுரை

பரதவர், பரதர் அல்லது பரவர் என்போர் தமிழகத்தின் மிகப்பழமையான சாதியினர் பாண்டிய வம்சத்தை தோற்றுவித்தவர்களே பரதவர்கள். ஐயாயிரம் ஆண்டு பாரம்பரியம் மிக்க இம்மக்கள் மீன்பிடித்தல், முத்துக்குளித்தல் போன்ற தொழில்களைச் செய்து தங்கள் வாழ்க்கையில் பெருஞ் செல்வந்தர்களாகச் சிறப்புடன் வாழ்ந்தவர்கள், குறுநில அரசர்களாக வணிகர்களாக, வாழ்ந்தவர்கள். இவ்வாறு மிகப் பெரிய வரலாற்றுச் சிறப்பு மிக்க மக்களாக வாழ்ந்த பரத மக்களின் வரலாறு விவரிக்கப்படுகிறது.

### பூர்வீக மக்கள்

தமிழ்நாடு, புவியியலாளராலும் மானுடவியலாளராலும் மிகவும் புராதமானது எனப்படுகிறது. தமிழகத்தின் தொல்குடியினர், எவ்வின மக்கள் என்பது குறித்து அறிஞர்கள் தமது கருத்துக்களைத் தெரிவிக்கின்றனர். சீனிவாச ஐயங்கார், ஆரியர், திராவிடர், நாகர் எனும் இனப் பெயர்கள் எவ்வெவரைக் குறிப்பிடுகின்றன என்பதை ஆயுமிடத்து, ஆரியர் எனும் சொல் பிராமணரைக் குறிப்பதாகவும், திராவிடர் எனும் சொல்வேளாளரைக் குறிப்பதாகவும், நாகர் எனும் சொல்கள்ளிறக்குவோர், வலைவீசுவோர், வேட்டையாடுவோர், பறையடிப் போர் எனும் தொடக்கத்தினரானவர்களைக் குறிப்பிடுவதாகவும் கருதுகின்றனர் (Srinivasa Iyengar, M.,1982). இந்நாகர் இனத்தினர் அத்துணை பேரும் நிலத்துடன் நேரடித் தொடர்பு இல்லாத இடங்கைப் பிரிவினர் என்பது இங்கு கருதத்தக்கது (தமிழர் வரலாறும் பண்பாடும், ப.121). இவருள் பரதர், பரதவர், பரவர், பரவாவலையர் எனும் சொற்கள் நாகர் இனத்தவரான மீனவர்களைக் குறிக்கும் சொற்களாகும் என்பது ஜேம்ஸ் ஆர் னலின் கூற்று. இவர்கள்

மிகவும் தொன்மையான மக்களாவர்.

தொல்காப்பியர் பொருளதிகார அகத் திணையில் குறிஞ்சி, முல்லை, மருதம், நெய்தல், பாலை என்னும் ஐந்து திணைகளைக் குறிப்பிடும்போது நெய்தல் நிலத்திற்கு, வருணன் மேய பெருமணல் உலகம் என அடைமொழி கொடுக்கிறார். இதனால் அன்று கடற்கரை என்பதே மணல் நிறைந்த பெருவெளி என்று கருதப்படுகிறது.

சங்கப் பாடல்கள், கடற்கரைப் பகுதி வெண்மணல் வெளியாக இருந்தது என்றும், இங்குக் கடல்சார் மக்களின் குடியிருப்புக்கள் இருந்தன என்றும், கடற்கரை வெளியிலேயே இவர்களின் தொழில் கருவிகள் கிடந்தன என்றும் கூறுகின்றன.

பரவர் அல்லது பரதர் என்றழைக்கப்படும் இச்சமூகமே பழமையான தமிழர் இனங்களில் ஒன்றாகும். பாண்டிய நாட்டு அரசுடன் மிக நெருங்கிய சமூகமாகப் பரதச்சமுதாயம் திகழ்ந்தது. சங்ககாலத்தில் பரதமக்கள் குறுநில மன்னர்களாகவும் தாங்கள் வாழும் பகுதிகளில் பாண்டிய நாட்டரசின் அதிகாரம் பெற்ற தலைவர்களாகவும் வாழ்ந்து வந்தனர். பாண்டி வம்சத்தை தோற்று வித்தவர்கள் பரதவர்கள். இயற்கைச் சீற்றங்களால் எல்லை மாறுதல்கள் ஏற்பட்ட போது போர் மறவர்களாக மாறி மற்ற அரசுகளை வீழ்த்தி ஏகாதி பத்தியத்தை நிலை நாட்டியவர்கள். பல நூற்றாண்டுகளாகப் பரதவர்களாகவும் மறவர்களாகவும் நாடாண்டவர்கள் பரத பாண்டியர்கள் (கட்டற்ற கலைக்களஞ்சியம் -விக்கிபீடியா).

பரதவர் திறங்கண்டு வியந்த பாண்டிய மன்னர்கள் கடற்கரையடுத்த பகுதியை ஒரு குறுநில அரசாகவே கருதினர். பரதவர் தேர்ந்தெடுத்த குலத்தலைவரைக் குறுநில மன்னராக ஏற்றுக் கொண்டனர். பரதவர் தம் குலத்தலை வரைத்தாமே தேர்ந்தெடுத்தனர். பிற்காலத்தில் தேர்வு செய்யப்பட்ட தலைவரின் வழித்தோன்றல்களையே தலைவர்களாக ஏற்றுக்கொள்ளும் மரபு ஏற்பட்டது. ஒவ்வொரு முத்துக்குளிப்பின் போதும் குலத்தலைவர் அனைத்து அரசு மரியாதைகளும் பெற்றார் என்று ஹிராஸ் அடிகள் கூறுகிறார் (1800 ஆண்டுகளுக்கு முற்பட்ட தமிழகம் - தமிழாக்கம் ப.120).

பரதவர்கள் பாண்டிய மன்னர்களுடன் கொண்ட தொடர்புக்குப் பாண்டியரின் மீன்கொடி இன்னுமொரு சான்றாகும். மீன், கண்ணுக்கு மட்டும் உவமையல்ல. மீன் கண்ணைத்திறந்து கொண்டு தான் கடலுக்குள்ளே கூட தூங்கும். எனவே, 'தூங்காத காவலன்' என்பதற்கு அடையாளமாகப் பாண்டியனின் கொடியில் மீன் பொறிக்கப்பட்டுள்ளது. இங்குக் குறிப்பிடத்தக்கதாகும்.

## இலக்கியத்தில் பரதவர்கள்

தமிழக வரலாற்றில் முதலில் தொகுக்கப்பட்ட ஆதாரமாகத் திகழ்வன, சங்க இலக்கியமான எட்டுத் தொகையும் பத்துப்பாட்டும் ஆகும். முதல் மூன்று நூற்றாண்டு காலத்திய சங்க இலக்கியங்கள், இராமேஸ்வரம் முதல் குமரிவரை வாழ்ந்த பரத குலமக்களைப் பற்றிப் பல்வேறு இடங்களில் குறிப்பிடுகின்றன. சங்ககாலக் கவிதையில் ஐந்தில் ஒன்று இவர்களின் வீரத்தையும், காதலையும் சிறப்பித்து பேசுகின்றன. மேலும் குமரி மாவட்டம் பற்றியும் இலக்கியங்களில் காணக்கிடக்கின்றன.

வட வேங்கடம் தென்குமரி ஆயிடைத்

**தமிழ் கூறும் நல்லுலகு**

என்று தொல்காப்பியமும்,

**"குமரியம் பெருந்துறை"**

என்று புறநானூறும்,

**"கங்கையாடிலென்காவிரியாடிலென்"**

என்று தேவாரமும் குறிப்பிடுகின்றன.

சிலப்பதிகாரத்தில் பல இடங்களில் மீனவர்கள் பற்றிய குறிப்புகள் காணக் கிடக்கின்றன. ஐந்தாம் காதையாகிய இந்திர விழவூரெடுத்த காதையில் கூறப்படும்.

**"அரச குமரரும் பரத குமரரும்**
**கவர் பரிப்புரவியர்களிற்றின் தொகுதியர்**

**இவர்பரித்தேரினர் இயைந்தொருங்கு ஈண்டி**

***(5:0:158:160)***

என்ற அடிகளின் மூலம், வீதிகளில் அரச குமரரும் பரதகுமரரும் குதிரைகள், களிறுகள், ஆகியனவற்றைப் பல எண்ணிக்கையில் உடையவராகவும்., தேரை உடையவராகவும் அந்நகர் பரதர் திகழ்ந்தனர் என்பது அக்காலத்தில் அப்பரதர் பெற்றிருந்த செல்வச் செழிப்பையும் உணர்த்தி நிற்கின்றன. பரதவர் என்னும் சொல்லுக்கு ஒவ்வொரு ஆசிரியரும் கூறும் பொருள் பற்றி இலக்கியங்கள் வாயிலாகக் காணலாம்.

இளங்கோவடிகள் எழுதிய சிலப்பதிகாரத்தை அரும்பத உரையுடனும் அடியார்க்கு நல்லார் உரையுடனும் தென்கலைச் செல்வர் டாக்டர் உ.வே. சாமி நாதய்யர் வெளியிட்டார். அக்காப்பியத்துள் பரதர், பரதவர் என வரும் இடங்கள் சிலவருமாறு.

***"உரைசால்சிறப்பின்அரசுவிழைதிருவின்***
***பரதவர் மலிந்த பயங் கெழுமாநகர்***

***(மனையறம் படுத்த காதை - 1-2)***

புகழ் பொருந்திய சிறப்பினை உடையவர்களும், அரசர் மதிக்கும் செல்வவளம் மிகுந்தவர்களும் ஆகிய பரதவர்கள் நிறைந்து வாழ்வதால் பயன்பெற்று விளங்கும் பூம்புகார் நகரம். இங்கு 'பரதவர்' என்னும் சொல்லுக்கு 'வணிகர் கடலோடிகள்' என்று அரும்பத உரையாசிரியர் பொருள் கூறுகிறார்.

***"மீன் வலைப் பரதவர்***

***(இந்திரவிழவூர் எடுத்தகாதை. 25)***

'பரதவர்' என்னும் சொல்லுக்கு "பட்டினவர்" என்று பொருள் கூறுவர்.

***"அரச குமாரரும் பரதவ குமாரரும்***

***(இந்திரவிழவூர் எடுத்தகாதை. 158)***

'பரதர்' என்ற சொல்லுக்கு 'வணிகர்' என்று பொருள் கூறுகிறார். அரும்பத உரையாசிரியர்

***"மறையின் மணந்தாரை வன் பரதர் பாக்கத்து"***

***(கானல் வரி -29)***

'பரதர்' என்னும் சொல்லுக்குப் பரதர் என்றே பொருள் தருகிறார். அரும்பத உரையாசிரியர்.

***"சேரிப் பரதவர் வலை முன்றில்"***

***(கானல்வரி 38)***

'பரதர்' என்னும் சொல்லுக்குப் பட்டினவர் என்று பொருள் தருகிறார் அடியார்க்கு நல்லார்.

பிற்காலத்தில் சிலப்பதிகாரம் முழுமைக்கும் புதிய உரை எழுதிய 'நாவலர்' ந.மு.வேங்கடசாமி நாட்டார் அவர்களும், டாக்டர் உ.வே. சாமி நாதய்யர் பதிப்பில் வரும் பொருளையே பெரும் பாலும் பின்பற்றியுள்ளார்.

'பரதர்' அல்லது 'பரதவர்' என்னும் பழந்தமிழ்ச் சொல்லுக்கு வணிகர், கடலோடிகள் என்னும் பொருளைப் பழைய உரையாசிரியர்களும் புதிய உரையாசிரியர்களும் ஏற்றுக் கொண்டுள்ளனர். சங்கப் பாடல்களுள் "பத்துப் பாட்டு", "பதிற்றுப் பத்து", 'புறநானூறு' ஆகிய புறத்திணைப் பாடல்களில் 120 வரிகளும், 'நற்றிணை', 'குறுந்தொகை', 'அகநானூறு', 'ஐங்குறுநூறு', 'கலித்தொகை' ஆகிய அகத்திணைப் பாடல்களில் 410 பாடல்களும் பரதவர் குறித்துப் பேசுகின்றன என்பார் தமிழறிஞர் திரு. கேசவராமன் (பண்டைத் தமிழரும் பரதவர் வாழ்வும், ப.60).

பரதவர் என்றாலே மீன்பிடித்தொழில் செய்பவர்கள் என்பதை உணர்த்தும் சங்க இலக்கியங்கள் சிலவற்றை அவற்றின் விளக்கங்களும் கீழே தொகுக்கப்பட்டுள்ளது.

***"திண் நிமில் வன்பரதர்" (புறம். 24)***

உறுதி மிக்க படகையாளும் வலிமை மிக்க பரதர்,

***'பன்தலை இரும்பரதன்"***

***(பட்டினப்பாலை. 90)***

உப்பு நீர்படுவதால் பழுப் பேறிய தலை முடியைக் கொண்ட வலிமை மிக்க பரதன்.

***"கானலம் சிறுகுடிக்கடலி மேற் பரதவன்"***

***(நற்றிணை.4)***

*கடற்கரைச் சோலையில் அமைந்த சிறுகுடி என்னும் குடியிருப்பில் இருந்து கடல் மேல், செல்லும் பரதவன்.*

***"மீன் ஏறிபரதவர்" (நற்றிணை.45)***

*எறிஉளியால் கடல் மீன் மேல் எறிந்து புண்படுத்தும் பரதவர்.*

***உரவுக் கடல் உழந்த பெருவலைப் பரதவர் (நற்றிணை. 63)***

*வலிமைமிக்க கடலில் படகில் சென்று பெருவலையைப் பாய்ச்சி இழுக்கும் பரதவர்.*

***"இருங்கழித்துழாவும் பனித்தலைப் பரதவர்" (நற்றிணை. 373)***

*உப்பளங்கழிகளில் உள்ள மீன்களை முழுகிப் பிடிக்கும் உழைப்பால் நனைந்த தலையுடைய பரதவர்*

***"திண்திமில் பரதவர்" (நற்றிணை. 388)***

*உறுதிமிக்க மீன் படகைச் செலுத்தும் பரதவர்*

***"நுண்வலைப் பரதவர்" (குறுந்தொகை.184)***

*நுட்பமான கண்களையும் முடிச்சுக் களையும் கொண்ட வலையைக் கையாளும் பரதவர்.*

***"கொடுந்திமில் பரதவர் கோட்டு மீன் எறிய" (குறுந்தொகை.304)***

*வளைந்த படகில் கடலுக்குச் சென்று எறியுளியால் அங்குத்திரியும் வாள் சுறாவின் மேல் எறிந்து காயப்படுத்தும் பரதவர்.*

***"பெருங்கடல் பரதவர்" (குறுந்தொகை.320)***

*தொலைதூரப் பெருங்கடல் மேல் அச்சம் இன்றிச் செல்லும் பரதவர்.*

***"பழந்திமில் கொன்ற பரதவர்" (அகநானூறு. 10)***

*பழுதுபட்ட பழைய படகைக் கழித்து விடும் பரதவர் அல்லது விறகுக்காகச் சிதைக்கும் பரதவர்*

***"பெருங்கடல் வேட்டத்துச்சிறு குடிப்பரதவர்" (அகநானூறு.140)***

*பெருங்கடலில் மீன் வேட்டைக்காகச் செல்லும் சிறிய குடியிருப்பில் வாழும் பரதவர்.*

***"நாள்வலை முகந்தகோள்வல் பரதவர்" (அகநானூறு. 300)***

*இளங்காலைப் பொழுதில் புதிதாகப் பின்னியவலையால் பாடுஅறிந்து மீன்களைப் பிடிக்கும் பரதவர்.*

***"வலம் புரி மூழ்கிய வான்திமில் பரதவர்" (அகநானூறு.350)***

*பெரிய படகில் கடலுக்குச் சென்று மூழ்கி வலம் புரிச்சங்குகளைக் கொண்டு வரும் பரதவர்.*

*முதலில் பண்டைத் தமிழகத்தில் மீன்பிடித்து வாழந்தவர்கள் பரதவ மீனவர்கள் என்பதைச் சங்கப் பாடல் வரிகள் மூலம் நமக்குப் புலனாகிறது. நெய்தல் திணைக்குரிய தலை மக்களில் ஆடவர், சேர்ப்பன், புலம்பன், துறைவன், கொண்கன் என்றும் கூறப்படுவர். அத்தலைமகன் துணைவியர் பரத்தி, நழைச்சி என்றும் கூறப்படுவர்.*

*நெய்தல் நிலத்திற்குரிய உழைக்கும் மக்களுள் ஆடவர், நுளையர், பரதர், அளவர் (உப்பளத்தில் உழைப்போர்) எனப்படுவர். உழைக்கும் ஆடவரின் துணைவியர் நுளைச்சியர், பரத்தியர், அளத்தியர் எனப்படுவர் (பண்டைத் தமிழரும் பரதவர் வாழ்வும், ப.142).*

***"புள்ளிரை கூறும். மெல்லம் புலம்பன்" (அகம்.10)***

*பறவைகள் மீன் இரைதேடும் மென்மைத் தன்மை வாய்ந்த கடற்கரைப் பகுதியின் தலைவன்.*

***"மெல்லம் புலம்பன்" (அகம். 330)***

*மென்மைத் தன்மை வாய்ந்த கடற்கரைப் பகுதியின் தலைவன்.*

***"சிறுவீஞாழல் பெருங்கடற் சேர்ப்பன்." (நற்றிணை. 74)***

*சிறிய பூக்களையுடைய கொன்றை மரங்கள் மணக்கும் பெரிய கடலின் கரைப்பகுதியின் தலைவன்.*

**"தென்கடற் சேர்ப்பன்"**

**(ஐந்திணை ஐம்பது.1)**

தெளிந்த கடலின் கடைப்பகுதியின் தலைவன்.

**"பண்டங் கொள்நாவாய்வழங்கும் துறைவன்"**

**(ஐந்திணை எழுபது. 6)**

சரக்குகள் ஏற்றிச் செல்லும் கப்பல்கள் தங்கும் துறையின் தலைவன்.

**"தண்ணலந் துறைவன்"**

**(ஐந்திணை எழுபது.62)**

குளிர்ந்த அழகிய துறைகளின் தலைவன்

**"இயல்தேர்க் கொண்கன்"**

**(நற்றிணை.140)**

இயங்கும் தேரில் வரும் தலைவன்.

**மின்னிவர் கொடும் பூண் கொண்கன்"**

**(நற்றிணை. 187)**

மின்னிக்கவரும் வளைவான தங்கச் சங்கிலிகளை அணியும் தலைவன்.

இவ்வாறு சங்ககால த்தில் பரதவர் என்னும் பழந்தமிழ் மக்கள் வாழ்ந்ததை சங்க இலக்கியங்கள் குறிப்பிடுகின்றது.

**பரதவர் பெயர்க் காரணம்**

நெய்தல் திணைக்கு உரியவர்களை நினைக்கும் பொழுது "பரதவர் என்னும் மக்கள் தாம் நம் கண்முன் தோன்றுவர் என்று கவிஞர் மீனவன் குறிப்பிடுகின்றார். தமிழில் பரவை என்றால் பெரும் நீர்பரப்பு அல்லது கடல் எனப் பொருள்படும். பரவை என்பதிலிருந்து பரவர் சொல்பிறந்தது (பரவை + அர்). பரதர் என்றால் நெய்தல் நிலமக்கள், வைசியர் எனவும் பரதர் என்ற சொல்லுக்குத் தென்திசை ஆண்ட குறுநில மன்னர்கள் எனவும் அகராதிகள் பொருள் கூறுகின்றன (காழி சிவகண்ணுசாமிப் பிள்ளை கழகத் தமிழகராதி, ப.647).

பரதவர் என்ற சொல்லுக்கு அயல் நாட்டுடன் கடல் வணிகத்தில் ஈடுபட்டவன் என்றும், தமிழ் வணிகர்களுடன் சேர்ந்து வணிகத்தில் ஈடுபட்டவன் என்றும் இலங்கைக் கல்வெட்டுக்கள் குறித்துள்ளன (அபயகிரிக் கல்வெட்டு,ஐ.இ.1970 மீ.94).

விரைவு காரணாகவும், ஒலி நயம் காரணமாகவும் ஒரு சொல்லில் உள்ள மெய்யெழுத்துக்கள் தம்முள் மாறி இடம் பெயர்தல் உண்டு. இது பெரும் பான்மையாகப் பேச்சிலும் சிறுபான்மையாக இலக்கியத்திலும் காணப்படும்.

| | |
|---|---|
| இடறி | இறடி |
| தசை | சதை |
| வைசாகி | வைகாசி |
| கொப்புளம் | பொக்களம் |
| விசிறி | சிவிறி |

(முனைவர் மு .வ. மொழி நூல் பக. 80-81)

மேற்கூறியபடி பரதவர் என்ற சொல்லில் 'வ' எனும் எழுத்தும் 'த' எனும் எழுத்தும் பின் முன் இடம் பெயர்ந்து பரதவர் என்றாயிற்று நாளடைவில் இச்சொல் பருவத (ராஜகுலம்) எனத் திரிந்தது (பரதவர் இனமீட்டுருவாக்க வரைவியல் ப.21).

செப்பு உலோகத்தால் படகு அமைத்து மீன் பிடித்தமையால் இப்பரதவர் செம்படவர் எனப்பட்டனர். சிவபெருமானின் போர்ப் படைவீரர் மரபில் வந்தவர் ஆகையினால் சிவன் படையர் என்பது செம்படவர் என்று திரிந்து வழங்கப்படுகிறது. இவர்கள் பருவதராஜ குலத்தினர் என அழைக்கப்படுகின்றனர். (பரதவராஜகுலம்) செம்படச்சியாம் அங்கம்மாளை சிவனுக்குக் கொடுத்தவர் மீன மகரிஷியால் செம்படவர் எனச் சபிக்கப்பட்டவர்கள் (அபிதான சிந்தாமணி, ப.729).

பரதவர் எனும் பெயரே சங்க இலக்கியங்களில் பல்கி வழங்கப்பட்டுள்ளது. "பரதவர் நுழைய ரோடு பஃறியர், திமிலர் சாலர் கருதிய கடலர் கோலக்கழியரே நெய்தல் நிலமக்கள். (சூடாமணி நிகண்டு சூத்திரம் 77). இந்தச் சூத்திரப்படி பரதவர்கள் நெய்தல் நிலமக்களில் தலையானவர் என்பது தெரிகிறது.

கடற்கரையோரங்களின் பக்கங்களிலும், பட்டினங்களிலும் வசித்த நெய்தல் நிலத்து

மக்கள் பரதவர் என்னும் பட்டினவர் என்றும் பெயர் பெற்றனர். இவர்கள் கட்டுமரங்களிலும் வள்ளங்களிலும் படகுகளிலும் கடலில் சென்று வலைவீசி மீன்பிடித்தனர். மீன்களைப் பண்டமாற்று முறையில் விற்று வாழ்ந்தார்கள்[12].

கரையார் என்றும் பரதவருக்கு ஒரு பெயருண்டு. கடற்கரை அனைத்தும் அவர்களுக்குச் சொந்தம். கரையோரமே அவர்களது குடியிருப்பு இருந்தது. என வேகரையார் எனும் பெயர் எழுந்தது. இனி கடலின் கரைகளிலே அவர்கள் பட்டினம் பல கட்டினர். துறை பலவும் சமைத்தனர். ஆகவே பட்டினவர் என்ற பெயரும் உண்டு[13].

நாவாயில் (நாவாய் - மரக்கலம்) கடல் வணிகம் செய்தவர் நாவிகர் என்று பெயர் பெற்றனர். கடல் வாணிகம் செய்த பெரிய நாவிகர் மாநாவிகர் ஆவர். மாநாவிகர் எனும் பெயர் மருவி மாநாய்கர் என்று வழங்கப்பட்டது. (நாவாய் -மரக்கலம்) நாவாய்களில் வணிகம் செய்தவன் நாவிகன். நாவிகன் என்பது மருவிநாய்கன் எனப்பட்டான் என்கிறார் மயிலை சீனிவெங்கடசாமி.

பரதவர்கள் பல்வேறு கடல்சார் தொழில்களில் ஈடுபட்டதன் மூலம் தங்கள் தங்களுக்கென தொன்மங்களையும் ஐதீ கங்களையும் உருவாக்கிக் கொண்டார்கள். கி.பி. 1912 இல் அங்காள பரமேசுவரி உர்ப்பவ புராண சரித்திரத்தைப் பதிப்பித்த மேல்மலையனூர் வீரப்பதாசன் ஆதி ஐதீ கபுராணத்தில் தொண்ணூறு பரத வச்ச முதாய முன்னோடிகளைத் தொகுத்து கூறியுள்ளார் (பரதவர் இன மீட்டுருவாக்க வரைவியல், ப.118).

## பரதர், பரவர் எனும் பெயர்கள் நெல்லை இராமநாதபுரம்

குமரி மாவட்டத்திலும், சென்னை, செங்கற்பட்டு, தென்னார்காடு, தஞ்சை மாவட்டங்களில் வாழும் மீனவர்கள் பட்டினவர், கரையார் என்ற பெயர்களிலும் இராமநாதபுரம் குமரிமாவட்டங்களில் ஒரு பகுதியினர் முக்குவர் என்ற பெயரிலும் வாழ்கின்றனர். பரதவர், பரதர், பரவர் என்ற முப்பெயர்களும் எழுத்து வேறுபாடு களைக் கொண்டவை தாம். பரதவர் என்ற பெயரில் தகரம் கெட்டு 'பரவர்' என்றும் வகரம் கெட்டு 'பரதர்' எனவும் மாறியுள்ளது.

## பரதவர் குறித்த கல்வெட்டுக்கள்

திருவிதாங்கூர் சமஸ்தானத்தின் 1931 ஆம் ஆண்டு மக்கள் தொகைக்கணக்கெடுப்பு அறிக்கையொன்று கன்னியாகுமரி கோவிலுள்ள கல்வெட்டைப் பற்றிக் குறிப்பிடுகின்றது. அது குமரிக் கடலோரப் பகுதிகளை ஆண்டு வந்த பரத இன மன்னர்களைப் பற்றி விவரிக்கின்றது.

மதுரையில் கிடைத்த கி.மு. 3 ஆம் நூற்றாண்டு கல்வெட்டு, பரதமக்களைப் பற்றிக் குறிப்பிடுகின்றது. பிராமி எழுத்துக்களில் எழுதப்பட்டுள்ள இந்தகல் வெட்டானது மக்களை ஜைனமதத்தில் சேரவும் அம்மதத்தை வளர்க்கவும் பாண்டிய மன்னர்கள் மட்டுமின்றி, பரத இன மன்னர்களும் முயன்றதாக தெரிவிக்கின்றது.

மேலூர் தாலுகா, அரிக்காப்பட்டியிலுள்ள மலைக் குகைக் கல்வெட்டிலிருந்து சுமார் நான்கு அடி தொலைவில் கண்டுபிடிக்கப்பட்ட மற்றொரு கல்வெட்டானது 3.10 மீநீளம் கொண்டது. இதில் ஒரேவரியில் 33 எழுத்துக்களாக "இலஞ்சி மேல் மாப்பரவன் மகள் இமயவன் நல் முழைக் குக்கை கொடுப்பித்தவன்" என்று பொறிக்கப்பட்டுள்ளது. இதற்கு "மாப்பரவன் மகனான இமயவன் இந்தப் புனிதக் குகையினை உருவாக்கியவன்" என்று பொருள்.

பாண்டிய நெடுஞ்செழியன் படையெடுத்து வந்து போரிட்ட பரத இனமக்கள் பற்றி சங்க காலத் தமிழ் இலக்கியமான, 'மதுரைக் காஞ்சி" குறிப்பிடுகின்றது. இது பற்றி வேள்விக் குடியில் கிடைத்த தாமிரத்த கடுகளும் தெரிவிக்கின்றன. இம்மக்கள்

கிரேக்கம், ரோமானியம், எகிப்தியம், சீனா, ஜாவா, பாமியம் மற்றும் இலங்கை நாடுகளுடன் வாணிபத் தொடர்பு கொண்டு இருந்தனர். மேலும் குமரிமாவட்டத்தில் கிடைக்கும் இருபழமையான கல்வெட்டுக்களில், குமரிமுட்டத்தில் கண்டெடுக்கப்பட்ட கல்வெட்டு 1494 ஆண்டிற்குரியது. இது 46 வரிகளைக் கொண்டது.

இக்கல்வெட்டு குமரிமாவட்டத்தில் இந்தபள்ளிக்குவிளக்குஎரிக்கத்தேவையான தேங்காய் எண்ணெய் செலவிற்காகக் குமரி மாவட்டம்தறையில்மடிவலை, வாலவலை, சாலைவலை ஆகிய ஒவ்வொன்றிக்கும் ஒரு பணம் வீதமும் குமரி முட்டம் கோவை குளம் (கோவளம்) துறைகளின் ஏற்றுமதி இறக்குமதிக்காக உரு (சிறுபடகு) ஒன்றிற்கு ஒரு பணம் வீதமும் (மீன்) விலைபேசி விற்கும் சம்பானிடம் இருந்து ஒரு பணமும் கடமையாக (வரியாக) பெற்றுக்கொள்ளவும், மேலும் நெல் மற்றும் மீன் எடுப்புக்களும் வேறுள்ள வளமைகளும் பெற்றுக் கொள்ளும் படியும் கூறுகிறது.

இரண்டாவது கல்வெட்டு கி.பி.1526 ல் வெட்டப்பட்டது. இக்கல்வெட்டிலும் அரசன் பெயர் குறிக்கப்படவில்லை என்றாலும் வேணாட்டரசர்களின் குலப்பெயரான சிறவாய் மூத்ததம்பிரான் எனக் குறிக்கப்பட்டுள்ளது. அப்போது ஆட்சியில் இருந்தது பூதலவிரஸ்ரீவீர உதயமார்த்த மாண்டவர்மன் (1516-1534) எனத் தெரிய வருகிறது. முட்டத்தில் மூத்தகங்கன், இளையகங்கன் உள்ளிட்ட அடிதடி குடிமக்கள், சுற்றுப்புற இனத்தவர்களால் மீன்பறிப்பு, அடி தடி முதலியவன் முறைகளுக்கு ஆளாகிய போது இம்மக்கள் என்பாது காப்பில் உள்ளவர்கள் இவர்களுக்கு ஏற்படும் துன்பங்கள் என்னால் தட்டிக் கேட்கப்படும் எனும் பொருளில் குமரி முட்டத்தில் "அஞ்சினான் புகலிடமாகக் குடிகிடந்து கொள்ளவும்" என்று அரசன் அறிவிப்பு வெளியிட்டான்.

குமரிமாவட்டத்தில் கிடைத்துள்ளன. மேலும் மூன்று கல்லறை கல்வெட்டுக்களும் இவை கிறித்தவக் கல்லறைக் கல்வெட்டுக்களாகும். புத்தன் துறையில் தமிழில் வெட்டப்பட்டுள்ள இருகல்லறை கல்வெட்டுக்களும் முறையே 1891, 1894 ஆண்டுக்குரியன முதல் கல்வெட்டில் 27 வரிகள் பொறிக்கப்பட்டுள்ளன.

முதல் கல்வெட்டு இவ்வூர் கிறித்தவக் கோயில் கணக்கப்பிள்ளையின் மகன் சே வியர் என்பவருடையது. இக்கல்வெட்டின் கடைசி வாக்கியம் "இவர் மெட்ரி குலேசன் பாசானவர்" என்பது இங்கு இம்மக்களின் கல்வி நிலைக் குறிக்கப்படுகிறது. இரண்டாவது கல்வெட்டு சேவியரின் தந்தை கணக்கப் பிள்ளையின் மறைவு குறித்த செய்தியைத் தெரிவிக்கின்றது. மூன்றாவது கல்வெட்டு திருவிதாங்கோடு மாதாகோவிலில் (இன்று அது பெரிய நாயகி கோவில் என அழைக்கப்படுகிறது.) ஸ்பெயின் தேசபாதிரியார் குறித்து குறிக்கப்பட்டுள்ளது.

மொகஞ்சதாரோ, ஹராப்பா கல்வெட்டுச் சாசனங்களிலும் கூட, பரதவர் பற்றிய குறிப்புக்கள் பரவலாகக் காணக்கிடக்கின்றன. அவர்கள் இன்று முத்துக்குளித்துறையில் வாழும் பரதவரின் முன்னோர்கள் தான் என்று கல்வெட்டு மற்றும் வரலாற்று ஆராய்ச்சியாளர்கள் ஹிராஸ் அடிகள் குறிப்பிடுகிறார் (The Minavan in Mohenjadaro).

## முடிவுரை

மிகப்பழமையான சங்க இலக்கியங்களில் இடம் பெற்றுள்ள தொல்குடியினர் ஐவகை நிலமக்கள் ஆவர். அவர்களுள் கடற்கரையை இருப்பிடமாகக் கொண்ட நெய்தல் நிலமக்களும் அடங்குவர். கன்னியாகுமரி மாவட்;ட மீனவர்கள் மிக நீண்ட வரலாற்றுப் பாரம்பரியமும், பண்பாட்டுச் சிறப்பும் உடைய பழந்தமிழ் மக்களாவர். இவர்கள் பரதர் என்றே இன்றளவும்

அழைக்கப்படுகின்றனர். இவர்கள் இன்று வரை மீன் பிடித்தொழிலையும் செய்து வருகின்றனர். பாரம்பரியமான முறையையும் அதேசமயம் இன்றைய நவீன கால கருவிகளையும் பயன்படுத்தி மீன் பிடித் தொழிலை செய்து வருகின்றனர். இம்மக்களின் வாழ்வியலில் சமய மாற்றம் சமூக மாற்றம் ஏற்பட்ட போதிலும் அவர்களின் தொழில் வளர்ச்சி பெற்றே காணப்படுகிறது. மேலும், கல்விஅறிவிலும் சிறந்து அனைத்துது றைகளிலும் வேலைவாய்ப்பு பெற்று பொருளாதாரத்தில் முன்னேறிய சமுதாயமாகக் காணப்படுகின்றனர்.

## துணை நூற்பட்டியல்

1. சுப்பிரமணிய அய்யர், எம்.எஸ்., பரதவர் மதம் மாறிய கதை, தின மணி சுடர், 29.09.1959, வார அநு பந்தம்.
2. சேலை சகா தேவ முதலியார், காழி சி வ கண்ணு சாமிப்பிள்ளை, கழகத் தமிழ் அகராதி, திருநெல்வேலி, 1991.
3. பரமசிவம், அரு.முனைவர்., பரதவர் இன மீட்டுருவாக்க வரைவியல், காவ்யாவெளியீடு, 16, இரண்டாம் குறுக்குத் தெரு, டிரஸ்ட்புரம், கோடம்பாக்கம், சென்னை24, 2005.
4. மயிலை சீனி வெங்கடசாமி, சங்க கால தமிழர் வரலாறு, வெற்றியரசி பதிப்பகம், சென்னை - 600 088.
5. மீனவன், கவிஞர், பண்டையத் தமிழரும், பரதவர் வாழ்வும், சிவசக்தி பதிப்பகம், 20/43, நீலாதெற்குவீதி, நாகப்பட்டினம் 611 001, டிசம்பர் 2004.
6. வானமாமலை, நா., தமிழர் வரலாறும் பண்பாடும், நியூசெஞ்சுரி புக்ஹவுஸ், சென்னை, 1966.
7. Heras., Journal of Oriental Research, Madras Vo. X, 1936
8. James Hornell., The Outrigger Conoes of Indonesia Madras Fisheries Bulletin, Madras. 1920.
9. Srinivasa Iyanger, M. Tamil Studies. A.E.S. New Delhi, 1982